**செய்தி வெளியீடு எண்: 534** **நாள்: 10.08.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

### ஒன்றாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு பயிலும் சிறுபான்மையினர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற 30.9.2018–க்குள் விண்ணப்பிக்கலாம்

தமிழ்நாட்டில் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர்,கிறித்துவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதத்தை சார்ந்து அரசு , அரசு உதவி பெறும் மற்றும் மைய/ மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 2018–19 கல்வியாண்டில் ஒன்று முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகையும், 11ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை ( ஐடிஐ, ஐடிசி, வாழ்க்கை தொழிற்கல்வி, பாலிடெக்னிக், செவிலியர்/ஆசிரியர் பட்டயப்படிப்பு, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகள் உட்பட) பயில்பவர்களுக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகையும் மற்றும் தொழிற்கல்வி மற்றும் <u>தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு தகுதி மற்றும்</u> வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு மத்திய அரசின் **www.scholarship.gov.in** என்ற தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (NSP) ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2018–19ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் மேற்படி கல்வி உதவித்தொகை திட்டங்களின்கீழ் 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநிலங்களுக்கு கல்வி உதவித்தொகை (புதியது) வழங்க மைய அரசால் இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கல்வி உதவித்தொகை மாணவ / மாணவிகளின் வங்கி கணக்கில் மத்திய அரசால் நேரடியாக செலுத்தப்படும். கல்வி உதவித்தொகை (புதியது (ம) புதுப்பித்தல்) மாணவ / மாணவியர் 30.9.2018க்குள் மேற்படி இணைய தளத்தின் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

1) **கல்வி உதவித்தொகை (புதியது):–** மாணவ / மாணவியர் **www.scholarship.gov.in** என்ற இணையதள முகவரியில் New User? Register என்பதை தெரிவு செய்து முதன்மை விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.
2) மாணவ / மாணவியர் பதிவு செய்யப்பட்ட கைபேசி (Mobile) எண் இணைய தளத்தால் சரிபார்க்கப்பட்ட பின்னர் மட்டுமே விண்ணப்பம் செய்ய அனுமதிக்கப்படும். பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணில் மட்டுமே சில முக்கிய தகவல் மாணவ/ மாணவிகளுக்கு அனுப்பப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் இந்த அலைபேசி எண்ணை மாற்றக்கூடாது.

3) **கல்வி உதவித்தொகை– புதுப்பித்தல்:** கல்வி பயிலும் பள்ளி மாறாமல் கடந்த ஆண்டில் சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை பெற்றுவரும் மாணவ /மாணவியர் மட்டுமே புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களாக கருதப்படுவர். புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்கும்போது கடந்த ஆண்டு கல்வி உதவித்தொகை (புதியது)–க்கு பெறப்பட்ட விண்ணப்ப எண்ணை (Application ID) கொண்டே விண்ணப்பிக்க வேண்டும்.

4) புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர் கல்வி பயிலும் கல்வி நிறுவனங்களை மாற்ற இயலாது.

மாணவ மாணவியர்கள் இணையதளத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் மிகுந்த கவனத்துடன் விடுபடாமல் பூர்த்தி செய்து விண்ணபத்தை படியிறக்கம் செய்து அதனுடன் மாணவ /மாணவியரது புகைப்படம் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களின் நகல்களை இணைத்து குறிப்பிட்ட காலகெடுவிற்குள் கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஆவண நகல்களை விண்ணபத்துடன் இணைத்து அனுப்பாத மாணவ / மாணவிகளின் விண்ணப்பங்கள் பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் எந்த நிலையிலும் மாற்றவோ திருத்தவோ இயலாது.

## <u>கல்வி நிலையங்கள்</u>

கல்வி நிலையங்கள் ஆன்லைன் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பரிசீலித்து விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை சான்றாவணங்களுடன் சரிபார்த்து உறுதி செய்து தகுதி பெற்ற விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு 30.9.2018–க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

மைய அரசின் தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (NSP) புதிய கல்வி நிலையங்களை இணைப்பதற்கு DISE/AISHE குறியீட்டு எண் அவசியமாகும். கல்வி நிலையங்கள் மைய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சரியான DISE/AISHE குறியீட்டு எண்ணை மாணவ மாணவியருக்கு தெரிவிக்கவும், அறிவிப்பு பலகையில் குறிப்பிட வேண்டியது கல்வி நிலையங்களின் கடமையாகும்.

புதிய கல்வி நிலையங்கள் NSP இணைய தளத்தில் தங்களது கல்வி நிலையத்தின் அடிப்படை விவரங்களை உடன் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொண்டு தங்களுக்கான பயனாளர் குறியீட்டு (Login/password) விவரங்களை உடனடியாக பெற்றுகொள்ள வேண்டும். மேலும் NSP இணைய தளத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கல்வி நிலையங்களின் தொலைபேசி எண்கள் அல்லது பாடப்பிரிவில் மாற்றம் இருப்பின் உடன் திருத்தம் செய்துகொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்படி கல்வி உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள், ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தேவையான/ இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் இதர நிபந்தனைகள் அடங்கிய விரிவான விளம்பரங்கள் **http://www.bcmbcmw.tn.gov.in/welfschemes_minorities.htm**. என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன .மேலும் இத்திட்டம் தொடர்பான மைய அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் **http://www.minorityaffairs.gov.in** என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

சிறுபான்மையின மாணவ மாணவியர் மேற்படி கல்வி உதவித்தொகையினை பெற உரிய காலத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து பயனடையுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**